திருவாவடுதுறை ஆதீன வெளியீடு.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

திருவலஞ்சுழி

வரலாறு, தேவாரத் திருப்பதிகம் முதலியன
(குறிப்புரையுடன்)

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து
இருபதாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்

விகிருதியாண்டு ஆவணித்திங்கள் உஅ ஆம் நாள்
வழிபாட்டிற்கு எழுந்தருளியதன் நினைவாக வெளிவருவன.

திருவாவடுதுறை ஆதீன ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரது
கார்த்திகைப் புலவர் கல்லூரி விரிவுரையாளர்
திரு. அடிகளாசிரியரால் தொகுக்கப்பெற்றன.

திருவாவடுதுறை ஆதீனம் திருவாவடுதுறை
தஞ்சாவூர் ஜில்லா.
1950

பொருளடக்கம்.

பக்கம்

I	திருவலஞ்சுழி வரலாறு	1
II	திருஞான சம்பந்தர் தேவாரங்கள்	7
	1 திருமுறை உ பதிகம் கநஅ	7
	2 திருமுறை உ பதிகம் உசஉ	11
	3 திருமுறை ந பதிகம் நகூச	17
III	திருநாவுக்கரசர் தேவாரங்கள்	21
	1 திருமுறை ரு பதிகம் கஅ0	21
	2 திருமுறை கூ பதிகம் உஅச	25
	3 திருமுறை கூ பதிகம் உஅகூ	26
	4 திருமுறை கூ பதிகம் உஅஎ	27
IV	திருமுறை கக	31
	திருவலஞ்சுழி மும்மணிக்கோவை	31
V	பெரிய புராணம்	39
	1 திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்	
	2 திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்	
VI	திருப்புகழ்	43
VII	நீதி வெண்பா	46
VIII	அபிதான சிந்தாமணி	47
IX	சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா	48

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்டதேவர் துதி.

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவிரு தயகமல முகைக ளெல்லாங்
கண்டிறப்பக் காசினிமேல வந்தவருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணை மேவும்
மெய்கண்ட தேவனமிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம்.

குருமரபு வாழ்த்து.

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணை
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து ௨௰ ஆவது பட்டத்தில் எழுந்தருளி ஞானச் செங்கோல் செலுத்தும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் மக்கள் இம்மை மறுமைச் செல்வங்களைப் பெற்று இனிது வாழும் பொருட்டுச் செய்து வரும் பல அருட் செயல்களையும் நம் நாடு நன்கறிந்ததே யாகும்.

இப்பொழுது நம் நாடு இருக்கும் நிலையை நோக்கித் தெய்வ வுணர்ச்சியும் மக்கள் நல்வாழ்வுக்காய ஏனைய நல் லுணர்ச்சிகளும் பல்வகையானும் வளரவேண்டு மென்று திருவுளங்கொண்டு, அது நிறைவேறுதற்கு, ஊர்தோறுஞ் சென்று பலதிறப்பட்ட மக்களோடு பயில வேண்டுவது விரும்பப்படுவ தொன்றெனக் கண்டு பல திருப்பதி களையும் வழிபடும் பண்டைய முறையைக் கையாளத் திருவுள்ளங் கொண்டுள்ளார்கள்.

குருமகா சந்நிதான மவர்கள் திருவுள்ளப்படி விகிருதி ஆண்டு ஆவணி 22 ஆம் நாள் வியாழக் கிழமை திருவா வடுதுறையி னின்றும் புறப்பட்டு இடையிலுள்ள பல திருப்பதிகளையுங் கண்டு வணங்கி, புரட்டாசி முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை திருவானைக்காவிற்கு எழுந்தருளத் திரு வுள்ளங் கொண்டுள்ளார்கள். பின்னர் பாண்டி நாட்டுத் திருப்பதிக ளெல்லாங் கண்டும் வணங்கியும் திருமடங் களைக் கண்காணித்தும் வரத் திருவுள்ளங் கொண்டுள் ளார்கள். அந் நிகழ்ச்சிக் குறிப்புகள் பின்னர் வெளி வரும்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழியில் வழிபடும் திருப்பதிகளின் வரலாறுகளையும் அவற்றிற் குரிய திருப் பதிகங்களையும் எல்லோரும் அறியும் முறையில் அச்சிட்டு வழங்கவேண்டு மென்று கட்டளையிட்டபடி இத் திருப் பதியைக் கண்டு வணங்கும் நினைவாக இந் நூல் வெளி வருகிறது. இவ் வரலாறுகளையும் திருப்பதிகங்கட்குக் குறிப் புகளையும் எழுதித் தொகுத்த கரந்தையிலுள்ள எங்கள் கல்லூரி ஆசிரியர்கள் தொண்டும் மிகச் சுருங்கிய காலத் தில் அச்சிட்டுக் கொடுத்த கூட்டுறவுப் பதிப்பகத்தாரது ஒத்துழைப்பும் பெரிதும் பாராட்டத் தக்கன.

ஸ்ரீ நமசிவாய மூர்த்தி திருமரபு வாழ்க.

திருவலஞ்சுழி, ஒடுக்கம் சுப்புக்குட்டித் தம்பிரான்.
விகிருதி, ஆவணி, உஅ.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

காப்பு

வெள்ளை வாரணப்
பிள்ளை யார்பதம்
உள்ள ஞானமே
கொள்ள லாகுமே.

திருவலஞ்சுழித் தல வரலாறு.

சோழ நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் சுவாமிமலை புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே அரைக்கல் தொலைவில் காவிரித் தென்கரையில் திருவலஞ்சுழி என்னும் சிறந்ததலம் இருக்கிறது. இத்தலம் ஐந்து தேவாரப் பதிகங்களைப் பெற்ற தலங்களில் ஒன்றென்று திருப்பதிகக் கோவை என்னும் நூல் குறிக்கின்றது. திருஞான சம்பந்தர் தேவாரம் மூன்றும், திருநாவுக்கரசர் தேவாரம் இரண்டும் ஆக ஐந்து தேவாரப் பதிகங்கள் இத்தலத்திற்குள்ளன. மேற்கண்ட சமய குரவரிருவரும் இத்தலத்திற் கெழுந்தருளி இங்குக் கோயில் கொண்டிருக்கும் இறைவனை வணங்கிச் சென்றதாகப் பெரிய புராணம் கூறுகிறது.

கடவுள் பெயர்

இங்குக் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இறைவன் பெயர் கபர்த்தீசுரர் என்றும் இறைவிபெயர் பெரிய நாயகி என்றும் சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா என்னும் நூல் கூறுகின்றது. கபர்த்தம் என்பது சிவபெருமானுடைய சடைக்குரிய பெயராகும். கபர்த்தம் என்னும் சடையையுடைய ஈசர் கபர்த்தீசுரர் ஆவார். சம்பந்தப் பெருமானும் வலஞ்சுழி இறைவனை 'உரம் மன்னுஞ் சடையீர்' என்று விளிப்பது இச்சடைப் பெயரினாற் போலும்.

ஏரண்டர் வரலாறு

இக்கோவிலில் ஏரண்டர் என்னும் முனிவர் படிவம் வைக்கப் பெற்று அதற்கு முதற்பூசை நடந்து வருகிறது. அம் முனிவர் சிவநேயச் செல்வராய் இத்தலத்தில் தவஞ் செய்து வந்த காலத்தில், காவிரியாறு இத்தலத்திற்கு அண்மையில் பூமிக்குட் சுழித்திழிந்து பாதலம் பாய்ந்தது. அதனைக் கண்ட சோழ அரசனொருவன் துன்பமடைந்து ஏரண்ட மாமுனிவர்க்குச் சொல்ல, அவர் 'அந்தச் சுழியில் ஓர் அரசனுடைய முடித் தலையை அல்லது ஒரு தவசியினுடைய சடைத் தலையைக் கொடுத்தால் ஆறு உள்ளே சுழித்திரங்காமல் மேலே பாய்ந்தோடும்' என்று கூறினார். இதைக் கேட்ட சோழன் ஆறுபெருகி உலகம் நன்மையடையவேண்டும் என்று கருதித் தானே அச்சுழியில் விழுந்து இறந்தான்.

இதனைக் கண்ட அம்முனிவர் நம்முடைய சொல்லினால் அல்லவா அரசன் இறந்தான் என்று வருந்தித் தாமும்

அச்சுழியில் விழுந்து இறந்தார். காவிரியும் பாதலத்தில் சுழித்திழியாமல் மேலே பாய்ந் தோடிற்று என்று ஒரு பழங்கதை கூறப்படுகிறது.

விநாயகர் வரலாறு

இத் தலத்திலுள்ள விநாயகப்பெருமான் மிகப் பெருமை வாய்ந்தவர். இவருக்கு வெள்ளை வாரணர் அல்லது சுவேத விநாயகர் என்று பெயர். முற்காலத்தில் தேவர்கள் அமிர்தத்தைப் பெறும் பொருட்டுப் பாற்கடலைக் கடையச் சென்றனர். அவர்கள் அச்செயலை விநாயகரை வணங்காமல் தொடங்கிவிட்டனர். அதனால் அவர்களுக்கு அமிர்தத்திற்குப்பதில் நஞ்சுகிடைத்தது. இதை உணர்ந்த தேவர்கள் பாற்கடல் மணலால் விநாயகவுருவம் செய்து வழிபட்டனர். இந்திரன் அந்த உருவத்தை எடுத்து வந்து திருவலஞ்சுழியில் வைத்து வழிபட்டான். பின்னர் எடுத்துச் செல்லலாமென்று கருதி வழிபட்ட இடத்தி லேயே அவ்வுருவத்தை வைத்துவிட்டு அவன் தெய்வ லோகம் சென்றான். பின்னர் வந்து அவ் விநாயக வுருவத்தை எடுக்க முயன்றபோது அவனால் எடுக்கமுடிய வில்லை. அப்பொழுது விநாயகர் "தாம் திருவலஞ்சுழி யிலேயே தங்கியிருக்க விரும்புவதாகவும்; யாண்டுக்கு ஒரு முறை ஆவணித் திங்கள் வளர்பிறைச் சதுர்த்தியில் வந்து வழிபட்டால் உனக்கு வேண்டிய எல்லாப் பேறுகளையும் அளிக்கிறோம்" என்று கூறினார். அதனால், இந்திரன் மேற்படிக்காலத்தில் அரூபியாய் விநாயகரை வணங்கிச் செல்வதாக மக்கள் கூறுகின்றனர். ஆகையால் ஆவணித் திங்களில் வரும் அவ் விநாயக சதுர்த்தியில் விநாயகருக்கு அங்கே விழாக் கொண்டாடப் பெறுகிறது. மேலும்

திருமாலும் மார்கழித் திங்கள் வளர்பிறைச் சஷ்டியில் விநாயகரைப் பூசித்துச் செல்வதாக வரலாறுண்டு. இந்தத் தலத்தில் விநாயகருக்குச் செய்யப்பட்ட உலோக வடிவமும், வேணி, கமலை என்ற இரண்டு சத்திகளின் உலோக வடிவங்களும் மிக அழகாய் விளங்குகின்றன. இவை திருவிழாக்காலத்தில் வெளிவரும்.

கோயில்

திருவலஞ்சுழிக் கோயில் சிற்ப வேலைக்குப் பேர் போனது. சிறந்த சிற்பவேலை அமைந்த மண்டபம் இக்கோயிலை அலங்கரிக்கின்றது. ஒன்பதடி உயரமும் ஏழு அடி அகலமும் உள்ளதாய்ப் பல துளைகளையுடைய பலகணி யொன்று ஒரே கல்லில் செய்யப் பெற்று நமக் கெல்லாம் வியப்பையூட்டி விளங்குகின்றது. மண்டபத்தின் கொடுங்கைகள் இரண்டு வில்வளைவாய் இயற்றப் பட்டிருக்கின்றன.

கல்வெட்டுகள்.

இக் கோயிலில் ஏராளமான கல்வெட்டுக ளிருக்கின்றன. அவற்றைப்பெற்று நன்கு ஆராய்ந்து தனிப் புத்தகமாக வெளியிட்டுதவல் அறிஞர் கடமை யாகும். அவற்றுள் முதலாம் இராசராசனுடைய கல்வெட்டுகளும் இருக்கின்றன. அக் கல்வெட்டுகள் அவ்வரசனுக்குச் சிவபாதசேகரன் என்னும் பெயரிருப்பதாகவும், அவனுடைய மனைவியாகிய தந்தி சத்தி விடங்கியாரும், மகளாகிய குந்தவ்வை[illegible] மாதேவடிகளும் அக்கோயிலுக்கு அணிகள் [illegible]கவும் அறிவிக்கின்றன. மாதேவடிகளை அக் [illegible]டுவிற் பெண் என்று குறிப்பிடுகின்றது.

நூல்கள்

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய பதிகங்களும் பதினோராந் திருமுறையில் நக்கீர தேவர் இயற்றியதாகவுள்ள திருவலஞ்சுழி மும்மணிக் கோவை என்னும் பிரபந்தமும், பெரிய புராணத்திற் பல பாட்டுகளும், அருணகிரிநாதர் திருப்புகழில் இரண்டு சந்தப் பாட்டுகளும், நீதிவெண்பாவில் ஒரு பாட்டும் சிவக்ஷேத்திர சிவநாமக்கலி வெண்பாவில் ௬௧ ஆம் கண்ணியும் இத்தலத்தைக் குறிப்பனவாகும். அன்றியே இத்தலத்திற்கு ஒரு தலபுராணமும் உண்டு அது இதுபோழ்து எனக்குக் கிடைக்கப் பெறவில்லை. 'திருவலஞ்சுழிக் கோயில் வரலாறு' என்ற பெயருடன் தமிழ் உரைநடையில் ௬௨ பக்கங்களுடையதாய் மேற்படிக் கோயில் வரலாற்றை உணர்த்தி, சென்னை அரசாங்கக் கீழ்நாட்டுக்கலை நூல் நிலையத்தில் ௨௪௬௮ என்னும் எண்ணைப்பெற்று ஒரு சுவடியிருக்கின்றது.

அறிஞர் சிவப்பிரகாசர்

விருத்தாசலத்தைச் சார்ந்த திருமணிமுத்தாநதிக்கு வடக்கேயுள்ள கானூரிலிருந்த பரிபூரணர் என்பவர் வேதாந்த விஷயமாய்ப் பரிபூரணசித்தி என்றொரு நூல் செய்துள்ளார். அந்நூலிலுள்ள

'மருக்கமழ் பொழில்சூழ் மன்னுகோ வத்த
மாநகர் மேவுமா தவனை
யிருக்குநன் முடிமே லிருக்குமா தவனை
யிரும்பிறப் புணர்ந்துவந் தடைந்தோர்

கருக்குழி யணுகா வணமவர் பொருளும்
காயமு மாவியுங் கவர்ந்து
திருக்கினை யொழித்தாள் திருவலசுஞ்சுழியிற்
சிவப்பிர காசனைப் பணிவாம்'

என்னும் குருபரம்பரை உணர்த்துஞ் செய்யுளால் திருவலஞ்சுழியில் சிவப்பிரகாசர் என்ற ஆசிரியரொருவர் எழுந்தருளி யிருந்தாரென்று அறிகிறோம்.

முடிப்புரை

இத்தலத்தைப்பற்றி அறிய வேண்டியவை இன்னும் மிகுதியாக இருக்கும். சுருங்கிய காலத்தில் இவ்வளவே எழுதமுடிந்தது. அக்காலத்தில் திருஞானசம்பந்த சுவாமிகள் முதலான சமய குரவர் தலங்கள் தோறும் எழுந்தருளிச் சேவித்துச் சைவ சமயத்தைப் பரப்பினாற் போல இது போழ்து திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன கர்த்தர்களாகிய நம் மகா சந்நிதானம் தலங்கள் தோறும் எழுந்தருளுவதே இவ் வரலாறு எழுதுவதற்குக் காரணமாயிற்று. அவர்கள் இவ்வாறு என்றும் சமய பரிபாலனம் செய்து வாழும்படித் திருவருளை வணங்குகின்றேன்.

என்னை யேதும றிந்தில னெம்பிரான்
தன்னை நானுமுன் னேது மறிந்திலேன்
என்னைத் தன்னடி யானென் றறிதலும்
தன்னை நானும் பிரானென் றறிந்தெனே.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

திருமுறை ௨ பதிகம் ௧௩அ திருவலஞ்சுழி.

விஞவுரை

பண் : இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

விண்டெ லாமல ரவ்விரை நாறுதண் டேன்விம்மி
வண்டெ லாநசை யாலிசை பாடும் வலஞ்சுழித்
தொண்டெ லாம்பர வுஞ்சுடர் போலொளி யீர்சொலீர்
பண்டெ லாம்பலி தேர்ந்தொலி பாடல் பயின்றதே —௧

(மலர்) தேனை விம்முவித்து விண்டு மலர, வண்டெலாம் இசை பாடும் வலஞ்சுழியில் எழுந்தருளியுள்ள ஒளியீர், பண்டு பலி தேர்ந்து பாடல் பயின்றது (என் என்று) சொலீர் என்று கூட்டுக. விண்டு—இதழ் விரிந்து. விரை—நறுமணம். தொண்டு—தொண்டர்.

பாரல் வெண்குரு கும்பகு வாயன நாரையும்
வாரல் வெண்டிரை வாயிரை தேரும் வலஞ்சுழி
மூரல் வெண்முறு வன்னகு மொய்யொளி யீர்சொலீர்
ஊரல் வெண்டலை கொண்டுல கொக்கவு ழன்றதே —௨

குருகும் நாரையும் திரைவாய் இரைதேரும் வலஞ்சுழியில் எழுந்தருளியுள்ள ஒளியீர், வெண்டலை கொண்டு உலகொக்க உழன்றது (என் என்று) சொலீர். வாரல்-வருகின்ற அல்லது நெடிய. மூரல்-புன்சிரிப்பு. ஊரல்-புலால்.

இன்ன வண்ணமல ருங்கிளர் தாமரைத் தாதளாய்
வண்ண நுண்மணன் மேலனம் வைகும் வலஞ்சுழிச்
சுண்ண வெண்பொடிக் கொண்டுமெய் பூசவ லீர்சொலீர்
விண்ண வர்தொழ வெண்டலை யிற்பலி கொண்டதே —ந

இன்னத்தைப் போல மலரும் தாமரைப் பூவின் தாதில் படிந்து, மணல் மேல் அன்னம் வைகும் வலஞ்சுழியில் எழுந்தருளியுள்ள வல்லவரே, விண்ணவர் தொழ வெண்டலையிற் பலி கொண்டது (என் என்று) சொலீர்.

கோடெ லாநிறை யக்குவ ளைம்மல ருங்குழி
மாடெ லாமலி நீர்மண நாறும் வலஞ்சுழிச்
சேடெ லாமுடை யீர்சிறு மான்மறி யீர்சொலீர்
நாடெ லாமறி யத்தலை யின்னற வேற்றதே —ரு

கோடெலாமும் நிறையக் குவளையானது மலரும் குழிகளெல்லாம் நிறைந்த நீர் (பூ மணம்) வீசும் வலஞ்சுழியில் எழுந்தருளியுள்ள சேடெலாம் உடையீரே, மான்மறியீரே, நாடெலாம் அறியத் தலையில் அறவு ஏற்றது (என் என்று) சொலீர்.

கோடு-கரை. சேடு-வன்மை அல்லது பெருமை.

கொல்லை வென்றபுனத் திற்குரு மாமணி கொண்டுபோய்
வல்லை நுண்மணன் மேலனம் வைகும் வலஞ்சுழி
முல்லை வெண்முறு வன்னகை யாளொளி யீர்சொலீர்
சில்லை வெண்டலை யிற்பலி கொண்டுழல் செல்வமே —ரு

புனத்தின் குருமாமணியைக் கொண்டுபோய் மணன் மேல் அன்னம் வைகும் வலஞ்சுழியில், ஒளியீர், வெண்டலையிற் பலிகொண்டுழல் செல்வம் (ஏன் என்று) சொலீர்.

சில்லை-இழிவு. நகையாளோடு கூடிய ஒளியீர் என்று கூட்டுக.

பூச நீர்பொழி யும்புனற் பொன்னியிற் பன்மலர்
வாச நீர்குடை வாரிடர் தீர்க்கும் வலஞ்சுழித்
தேச நீர்திரு நீர்சிறு மான்மறி யீர்சொலீர்
ஏச வெண்டலை யிற்பலி கொள்வதி லாமையே —சு

பொன்னியினது பலமலர் வாசநீரானது குடைவாரிடர் தீர்க்கும் வலஞ்சுழியில் மான்மறியீர், வெண்டலையிற் பலிகொள்வதாகிய இலாமை (உமக்கு விளைந்தது ஏன் என்று) சொலீர்.

பூசநீர்-பூசிக்கத்தக்கநீர். தேசநீர்-ஒளித்தன்மை. திருநீர்-தெய்வத்தன்மை.

கந்த மாமலர்ச் சந்தொடு காரகி லுந்தழீஇ
வந்த நீர்குடை வாரிடர் தீர்க்கும் வலஞ்சுழி
அந்த நீர்முத னீர்நடு வாமடி கேள்சொலீர்
பந்த நீர்கரு தாதுல கிற்பலி கொள்வதே —எ

மலர் சந்து அகில் முதலியன தழீஇவந்த (காவிரி) நீர் குடை வாரிடர் தீர்க்கும் வலஞ்சுழியில் அடிகேள், பந்தத்தின் தன்மையைக் கருதாமல் (பற்றற்று) உலகிற் பலிகொள்வது (ஏன் என்று) சொலீர்.

அந்தநீர்-முடிவாம் தன்மை. முதல்நீர்-முதலாந் தன்மை 'அந்தநீர் முதநீர் நடுவா மடிகேன்' என்னும் கருத்து, 'முந்திய முதனடுவிறுதியு மானாய்' என்று திருவாசகத்திலும் வந்துள்ளது.

தேனுற் றநறு மாமலர்ச் சோலையில் வண்டினம்
வானுற் றநசை யாலிசை பாடும் வலஞ்சுழிக்
கானுற் றகளிற் றின்னுரி போர்க்கவல் லீர்சொலீர்
ஊனுற் றதலை கொண்டுல கொக்கவு ழன்றதே —அ

சோலையில் வண்டினம் இசைபாடும் வலஞ்சுழியில் (எழுந்தருளியுள்ள) களிற்றுரி போர்க்கவல்லீர், (பலியேற்கத்) தலை கொண்டு உலகொக்க உழன்றது (ஏன் என்று) சொலீர்.

தீர்த்த நீர்வந் திழிபுனற் பொன்னியிற் பன்மலர்
வார்த்த நீர்குடை வாரிடர் தீர்க்கும் வலஞ்சுழி
ஆர்த்து வந்த வரக்கனை யன்றடர்த் தீர்சொலீர்
சீர்த்த வெண்டலை யிற்பலி கொள்வதுஞ் சீர்மையே —கூ

பொன்னியின் பன்மலர் ஒழுகிய நீர் குடைவார் இடர் தீர்க்கும் வலஞ்சுழியில் (எழுந்தருளியுள்ள) அரக்கனை அடர்த்தவரே, வெண்டலையிற் பலிகொள்வதாகிய உம் சீர்மை (என் என்று) சொலீர்.

தீர்த்தம்-தூய்மை. வார்த்த-ஒழுகிய. வார்ந்த என்பது வார்த்த என்றாயது. அரக்கன்-இராவணன்.

உரம னுஞ்சடை யீர்விடை யீரும தின்னருள்
வரம னும்பெற லாவது மெந்தை வலஞ்சுழிப்
பிரம னுந்திரு மாலு மளப்பரி யீர்சொலீர்
சிரமே னுங்கல னிற்பலி வேண்டிய செல்வமே —௰

உரம் மன்னும் சடையீர், விடையீர், உமது இன்னருள் வர, எல்லாமனுவும் பெறலாகின்ற இடமும் எம் தந்தையாகிய (நீர் எழுந்தருளியிருக்கும்) வலஞ்சுழியல்லவா! அவ்வலஞ்சுழியில் எழுந்தருளியிருக்கும் அளப்பரியீர், சிரமெனும் கலனிற் பலிவேண்டிய செல்வம் (என் என்று) சொலீர்.

வீடு ஞானமும் வேண்டுதி ரேல்விர தங்களால்
வாடி ஞானமென் னுவது மெந்தை வலஞ்சுழி
நாடி ஞானசம் பந்தன செந்தமிழ் கொண்டிசை
பாடு ஞானம்வல் லாரடி சேர்வது ஞானமே —௧௧

(உலகத்தவர்களே) ஞானமும் வீடும் வேண்டுதிரேல் விரதங்களால் வாடி அவ்விரதங்களை யுணரும் ஞானத்தைப் பெற்று என்னுவது? எந்தை வலஞ்சுழியை நாடி ஞானசம்பந்தன் சொன்ன செந்தமிழ் கொண்டு பாடும் இசைஞானம்வல்லார் அடியைச் சேர்வதே ஞானமாகும்.

திருச்சிற்றம்பலம்.

பண் : நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
யிருங்கடல் வையத்து
முன்னநீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடு மதனாலே. —௧

நெஞ்சமே, காவிரிசூழ் திருவலஞ்சுழி வாணனை வாயாரப் பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனால், (இச்சிறந்த பேற்றைப் பெறுவதற்கு) முன்னம் நீ புரிந்த நல்வினைப் பயனிடை எந்தவிதமான (சிறந்த) புண்ணியம் செய்தனை?

முழுமணி-ஆற்றோட்டத்தினால் தேய்ந்து வடிவு குறையாத மணி. வாழ்நன் என்பது வாணன் என்று மருவியது.

விண்டொ ழிந்தன நம்முடை வல்வினை
விரிகடல் வரு நஞ்சம்
உண்டி றைஞ்சுவா னவர்தமைத் தாங்கிய
விறைவனை யுலகத்தில்
வண்டு வாழ்குழன் மங்கையொர் பங்கனை
வலஞ்சுழி யிடமாகக்
கொண்ட நாதன்மெய்த் தொழில்புரி தொண்டரோ
டினிதிருந் தமையாலே. —௨

கடல்வரு நஞ்சம் உண்டு வானவரைத் தாங்கிய இறைவனும் மங்கையொர் பங்கனும் ஆகிய வலஞ்சுழி இடமாகக் கொண்ட நாதனது மெய்த்தொழில் புரி தொண்டரோடு நாம் இனிதிருந்தமையால் நம்முடைய வல்வினைகளெல்லாம் விண்டு ஒழிந்தன.

விண்டல் - வேறுபடல். மெய்த்தொழில் - உண்மையாகிய சிவ கைங்கர்யம்.

திருந்த லார்புரந் தீயெழச் செறுவன
விறலின்க ணடியாரைப்
பரிந்து காப்பன பத்தியில் வருவன
மத்தமாம் பிணிநோய்க்கு
மருந்து மாவன மந்திர மாவன
வலஞ்சுழி யிடமாக
இருந்த நாயக னிமையவ ரேத்திய
விணையடித் தலந்தானே. —௩

வலஞ்சுழி இடமாக இருந்த நாயகனது இமையவர் ஏத்திய இணையடித்தலங்கள், புரந் தீயெழச் செறுவன; அடியாரைக் காப்பன; (அடியார்க்குப்) பத்தியில் வருவன; பிணிக்கும் நோய்க்கு மருந்துமாவன; மந்திரமும் ஆவன.

கறைகொள் கண்டத்தர் காய்கதிர் நிறத்தின
ரறத்திற முனிவர்க்கன்
றிறைவ ராலிடை நீழலி லிருந்துகந்
தினிதருள் பெருமானார்
மறைக ளோதுவர் வருபுனல் வலஞ்சுழி
யிடமகிழ்ந் தருங்கானத்
தறைக முல்சிலம் பார்க்கநின் றாடிய
வற்புத மறியோமே. —௪

கறைக்கண்டத்தர் கதிர் நிறத்தினர் அன்று முனிவர்க்கு அறத்திறத்தை ஆலிடை நீழலில் தங்கியவராய் இருந்து உகந்து இனிதருள் செய்த பெருமானாராகிய அவர், மறைகளை ஓதுவாராய் வலஞ்சுழியை இடமாக மகிழ்ந்து கானத்திலே சிலம்பார்க்க நின்றாடிய அற்புதம் யாம் அறியோம்.

இறைவர்-தங்கியவர். இறை-தங்குதல்.

மண்ணர் நீரர்விண் காற்றின ராற்றலா
மெரியுரு வொருபாகம்
பெண்ண ராணெனத் தெரிவரும் வடிவினர்
பெருங்கடற் பவளம்போல்
வண்ண ராகிலும் வலஞ்சுழி பிரிகிலார்
பரிபவர் மனம்புக்க
எண்ண ராகிலு மெனைப்பல வியம்புவ
ரிணையடி தொழுவாரே. —ரு

வலஞ்சுழி பிரிகிலாராகிய (இறைவர் புறத்தே) கடற்பவளம் போன்ற வண்ணராகிலும், (அகத்தே) பரிபவர் மனம்புக்க எண்ணராகிலும் இணையடி தொழுவாராகிய (தொண்டர், அவரை) மண்ணர், நீரர், விண்ணர், காற்றினர், ஆற்றலாம் எரியுருவர், ஒரு பாகம் பெண்ணர், ஒரு பாகம் ஆணெனக்கூறித் தெரிவரும் வடிவினர் (என்று) எனைப்பல வியம்புவர்.

விண்ணர், எரியர் என்பதில் அர் விகுதி தொக்கது. பரிபவர்—இரங்குபவர்.

ஒருவ ராலுவ மிப்பதை யரியதோர்
மேனியர் மடமாதர்
இருவ ராதரிப் பார்பல பூதமும்
பேய்களு மடையாளம்
அருவ ராததோர் வெண்டலை கைப்பிடித்
தகந்தொறும் பலிக்கென்று
வருவ ரேலவர் வலஞ்சுழி யடிகளே
வரிவளை கவர்ந்தாரே. —சு

உவமானமில்லாத மேனியர், மாதர் இருவரால் ஆதரிக்கப் பெற்றவர். பூதமும் பேய்களும் அடையாளம் (கண்டு) அருவாத வெண்டலை கைப்பிடித்து அகந்தொறும் பலிக்கென்று வருவரேல் அவர் வலஞ்சுழியடிகளே; அவரே என் வரிவளை கவர்ந்தார். இது தலைவி கூற்று.

மாதர் இருவர்-கங்கையும் உமாதேவியாரும்.

குன்றி யூர்குட மூக்கிடம் வலம்புரங்
குலவிய நெய்த்தானம்
என்றிவ் வூர்களி லோமென்று மியம்புவ
ரிமையவர் பணிகேட்பார்
அன்றி யூர்தமக் குள்ளன வறிகிலோம்
வலஞ்சுழி யரனூர்பால்
சென்ற வூர்தனிற் றலைப்பட லாமென்று
சேயிழை தளர்வாமே. —எ

வலஞ்சுழி அரனூர், குன்றியூரும் குடமூக்கும், வலம்புரமும், நெய்த்தானமும் ஆகிய இவ்வூர்களில் இல்லை யுடையோம் என்றும் இயம்புவர்; அவருடைய பணியை இமையவரும் கேட்பார். அன்றியும் அவர் தமக்குள்ளனவாகிய ஊர்கள் இன்னும் எவை என்றும் அறிகிலோம். சென்ற ஊர்தனில் அவர்பால் தலைப்படலாமென்று சேயிழையாகிய யாம் தளர்வாம்.

தலைப்படல்-கூடுதல்.

குயிலி னேர்மொழிக் கொடியிடை வெருவுறக்
குலவரைப் பரப்பாய
கயிலை யைப்பிடித் தெடுத்தவன் கதிர்முடி
தோளிரு பதுமூன்றி
மயிலி னேரன சாயலோ டமர்ந்தவன்
வலஞ்சுழி யெம்மானைப்
பயில வல்லவர் பரகதி காண்பவ
ரல்லவர் காணாரே. —அ

கொடியிடையம்மையார் வெருவுறக் கயிலையைப் பிடித் தெடுத்தவனாகிய இராவணன் முடியும் தோளிருபதும் ஊன்றி, மயிலை யொத்த சாயலைப் பெற்றிருக்கும் அவ்வம்மையாருடன் அமர்ந்தவனாகிய வலஞ்சுழி எம்மானைப் பயில வல்லவர் பரகதி காண்பவராவார். அல்லவர் காணார்.

பரகதி-வீடு.

அழல தோம்பிய வலர்மிசை யண்ணலு
மரவணைத் துயின்றானும்
கழலுஞ் சென்னியுங் காண்பரி தாயவர்
மாண்பமர் தடக்கையில்
மழலை வீணையர் மகிழ்திரு வலஞ்சுழி
வலங்கொடு பாதத்தால்
சுழலு மாந்தர்க டொல்வினை யதனொடு
துன்பங்கள் களைவாரே. —க

அலர்மிசை யண்ணலாகிய பிரமனும், அரவணைத் துயின்றானாகிய திருமாலும் கழலும் சென்னியும் காண்பரிதாயவர், கையில் வீணையராகிய (இறைவன்) மகிழ்ந்தருள் திருவலஞ்சுழியை வலங்கொடு பாதத்தால் சுழலும் மாந்தர்கள் தொல்வினை யதனொடு துன்பங்கள் களைவாரே. அலர்மிசை யண்ணல் சென்னியும், அரவணை துயின்றான் கழலும் காண்பரிதாயவர் என்று எதிர் நிரல் நிறையாகப் பொருள் கொள்க.

சுழலுதல்-வலம் வருதல். தொல்வினை-சஞ்சிதம்.

அறிவி லாதவன் சமணர்கள் சாக்கியர்
தவம்புரிந் தவஞ்செய்வார்
நெறிய லாதன கூறுவர் மற்றவை
தேறன்மின் மாறாநீர்
மறியு லாந்திரைக் காவிரி வலஞ்சுழி
மருவிய பெருமானைப்
பிறிவி லாதவர் பெறுகதி பேசிடி
லளவறுப் பொண்ணாதே. —உ

சமணர்களும், சாக்கியர்களும் தவம்புரிந்து அவம் செய்வார்; நெறியலாதன கூறுவர் அவை தேறன்மின். காவிரி வலஞ்சுழி மருவிய பெருமானைப் பிரிவிலாதவர் (ஆகிய பெரியார்) பெறுகதியைப் பேசிடின் அளவறுக்க ஒண்ணாது (ஆதலின் அதனைக் கொள்ளுமின்).

பிரிவிலாதவர் என்பது எதுகை நோக்கித் திரிந்தது.

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய
மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம் பந்தன்வாய்
நவிற்றிய தமிழ்மாலை
ஆத ரித்திசை கற்றுவல் லார்சொலக்
கேட்டுகந் தவர்தம்மை
வாதி யாவினை மறுமைக்கு மிம்மைக்கும்
வருத்தம்வந் தடையாவே.

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ் மாலையை ஆதரித்து, இசை கற்று, வல்லார் சொலக்கேட்டு உகந்தவரை வினை வாதியா; இம்மைக்கும் மறுமைக்கும் வருத்தம் வர்தடையா,

திருச்சிற்றம்பலம்.

திருமுறை ௩

பதிகம் ௩௯௪ பண் : பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்

பள்ளம தாய படர்சடைமேற் பயிலுந் திரைக்கங்கை
வெள்ளம தார விரும்பிநின்ற விகிர்தன் விடையேறும்
வள்ளல் வலஞ்சுழி வாணனென்று மருவி நினைந்தேத்தி
உள்ள முருக வுணருமின்க ளுறுநோ யடையாவே —க

கங்கை வெள்ளமதை ஆர விரும்பி நின்ற விகிர்தன், விடையேறும் வள்ளல், வலஞ்சுழி வாணன் என்று மருவி, நினைந்து, ஏத்தி, உள்ளம் உருக (நீவிர்) உணருமின்கள். (உங்களிடம்) நோய் அடையா.

விகிர்தன்-வேறுபட்டவன். உறுநோய்-மிகுதியான துன்பங்கள்.

காரணி வெள்ளை மதியஞ்சூடிக் கமழ்புன் சடைதன்மேல்
தாரணி கொன்றையுந் தண்ணெருக்குந் தழைய நுழைவித்து
வாரணி கொங்கைந லாடனோடும் வலஞ்சுழி மேவியவர்
ஊரணி பெய்பலி கொண்டுகந்த வுவகை யறியோமே —உ

சடைமேல் மதியம் சூடிக் கொன்றையும் எருக்கும் தழைய நுழைவித்து, கொங்கை நல்லாளாகிய உமாதேவியாரோடும் வலஞ்சுழியை மேவியவர், ஊர் பெய்கின்ற அணிபலியைக் கொண்டு உகந்த உவகையை யாம் அறியோம்.

கார்அணி-களங்கத்தை அணிகின்ற, புன்சடை-மிகமெல்லிய மயிரால் ஆகிய சடை.

பொன்னிய லுந்திரு மேனிதன்மேற் புரிநூல் பொலிவித்து
மின்னிய லுஞ்சடை தாழவேழ வுரிபோர்த் தரவாட
மன்னிய மாமறை யோர்கள்போற் றும் வலஞ்சுழி வாணர்தம் மேல்
உன்னிய சிந்தையி னீங்ககில்லார்க் குயர்வாம் பிணிபோமே—ந

திருமேனிமேல் புரிநூல் பொலிவித்து, சடைதாழ, வேழவுரி போர்த்து, அரவாட மறையோர்கள் போற்றும்படி (விளங்கும்) வலஞ்சுழி வாணர்மேல் உன்னிய சிந்தையினின்றும் நீங்கவில்லார்க்கு (நீங்காதார்க்கு) உயர்வாம் பிணிகளெல்லாம் போகும்.

வேழவுரி-யானைத்தோல். உன்னிய-நினைத்த. உயர்வாம்பிணி-தொழுநோய் முதலிய பெருநோய்கள் அல்லது பிறவிப்பிணியுமாம்.

விடையொரு பாலொரு பால்விரும்பு மெல்லியல் புல்கியதோர்
சடையொரு பாலொரு பாலிடங்கொ டாழ்குழல் போற் றிசைப்ப
நடையொரு பாலொரு பால்சிலம்பு நாளும் வலஞ்சுழிசேர்
அடையொரு பாலடை யாதசெய்யுஞ் செய்கை யறியோமே

விடை ஒருபாலும், மெல்லியல் விரும்பி ஒருபால் புல்கிக்கிடக்கும் சடை ஒருபாலும், இடங்கொள் தாழ்குழல் ஒருபாலும் (அன்பர்கள்) போற்றி இசைக்க (நடக்கும்) நடை ஒருபாலும் சிலம்பு ஒரு பாலும் ஆகி, நாளும் வலஞ்சுழி சேர்ந்துள்ள அடையப்பட்ட ஒருபாலாயுள்ளவனை அடையாத செய்யும் செய்கையை யாம் அறியோம் என்று கூட்டுக.

அடையொருபால்-அடையத்தக்க ஒருபால். அது வீடு. அல்லது ஏகன் என்று கூறலும் ஒன்று.

கையம ரும்மழு நாகம்வீணை கலைமான் மறியேந்தி
மெய்யம ரும்பொடிப் பூசிவீசுங் குழையார் தருதோடும்
பையம ரும்மர வாடவாடும் படர்சடை யார்க்கிடமாம்
மையம ரும்பொழில் சூழும்வேலி வலஞ்சுழி மாநகரே —ரு

மழுவும், நாகமும், வீணையும், மான்மறியும், ஏந்திப் பொடிபூசி வீசுங்குழையும் ஆர்தருதோடும் அரவும் ஆடும்படி ஆடும் படர்சடையார்க்கு வலஞ்சுழிமாநகர் இடமாம். இறைவன் பெண்பாதியானமையால் குழையுடன் தோடுங் கூறினார்.

தண்டொடு சூலந் தழையவேந்தித் தையலொருபாகம்
கண்டிடு பெய்பலி பேணிநாணூர் கரியி னுரிதோலர்
வண்டிடு மொய்பொழில் சூழ்ந்தமாட வலஞ்சுழி மன்னியவர்
தொண்டொடு கூடித் துதைந்துநின்ற தொடர்பைத் தொடர்வோமே—சு

ஒருபாகமாகிய தையலார் தண்டும் சூலமும் ஏந்திய (பிட்சாடனக் கோலத்தைக்) கண்டு இடுகின்றபெய்பலியைப் (பெரிதும்) பேணி, அதற்கு நாணூர், கரியின் உரிதோலார் வலஞ்சுழி மன்னியவர் (ஆகிய இறைவர்தம்) தொடர்பை (யாம்) தொடர்வோம்.

தொண்டு-இறைவர்க்காம்பணி. தொடர்பு-பத்தி. துதைந்து-படிந்து.

கல்லிய லும்மலை யங்கை நீங்க வளைத்து வளையாதார்
சொல்லிய லும்மதின் மூன்றுஞ்செற்ற சுடரா னிடர்நீங்க
மல்லிய லுந்திர டோளெம்மாதி வலஞ்சுழி மாநகரே
புல்கிய வேந்தனைப் புல்கியேத்தி யிருப்பவர் புண்ணியரே—எ

மலையை வளைத்து, வளையாதாருடைய மதில் மூன்றும் செற்ற சுடரானும். எம் ஆதியும் வலஞ்சுழிமாநகரே புல்கியவேந்தனும் (ஆகிய இறைவனைப் புல்கி ஏத்தியிருப்பார் புண்ணியர்.

மலை-மேருமலை. வளையாதார்-வணங்காராகிய திரிபுராதியர். மல்-வலிவு. புல்கிய-பொருந்திய.

வெஞ்சின வாளரக்கன் வரையை விறலா லெடுத்தான்றோள்
அஞ்சுமோ ராறிரு நான்குமொன் றுமடர்த்தா ரழகாய
நஞ்சிருள் கண்டத்து நாதரென்று நணுகு மிடம்போலும்
மஞ்சுல வும்பொழில் வண்டுகெண்டும் வலஞ்சுழி மாநகரே-அ

வரையை விறலால் எடுத்தானாகிய அரக்கன் தோள்களாகிய அஞ்சும் ஆறும் இருநான்கும் (எட்டும்) ஒன்றும் என்று கூறும் இருபதையும் அடர்த்தவரும், நஞ்சிருள் கண்டத்து நாதரும் ஆகிய இறைவர் என்றும் நணுகும் இடம் வலஞ்சுழி மாநகர் போலும்.

விறல்-வெற்றி அல்லது வலி. மஞ்சு-மேகம். கெண்டும்-கிண்டும்

ஏடிய நான்முகன் சீர்நெடுமா லெனநின் றவர்காணார்
கூடிய கூரெரி யாய்நிமிர்ந்த குழக ருலகேத்த
வாடிய வெண்டலை கையிலேந்தி வலஞ்சுழி மேயவெம்மான்
பாடிய நான்மறை யாளர்செய்யுஞ் சரிதை பலபலவே —க

நான்முகன் நெடுமாலென நின்றவர் காணார் (காணப் பெறாதவர்), எரியாய் நிமிர்ந்த குழகர், உலகேத்த வெண்டலை கையிலேந்தி வலஞ்சுழி மேய எம்மான், நான் மறையாளர் (ஆகிய இறைவர்), செய்யும் சரிதை பலப்பல.

ஏடு-தாமரை இதழ். கூர்எரி-மிகுதியான நெருப்பு. குழகர்-அழகர். சரிதை-திருவிளையாட்டு.

குண்டரும் புத்தருங் கூறையின்றிக் குழுவா ருரைநீத்துத்
தொண்டருந் தன்றொழில் பேணநின்ற கழலா னழலாடி
வண்டம ரும்பொழின் மல்குபொன்னி வலஞ்சுழி வாணனெம்
[மான்
பண்டொரு வேள்வி முனிந்துசெற்ற பரிசே பகர்வோமே —ய

குண்டரும், புத்தரும், கூறையின்றிக் குழுவுவாராகிய திகம்பர சமணர்களும், உரைக்கும் உரைகளை நீத்து, (எல்லாத்) தொண்டரும் தனது தொழிலே பேண நின்ற கழலானும், அழலாடியும் ஆகிய வலஞ்சுழிவாணனென்னும் எம்மான், பண்டு ஒருவேள்வியை முனிந்து செற்ற பரிசையே (யாம்) பகர்வாம்.

குண்டர்-சாக்கியர். குழுவுவார் என்பது குழுவார் என்றாயது ஒருவேள்வி-தக்கயாகம்.

வாழியெம் மானெனக் கெந்தைமேய வலஞ்சுழி மாநகர்மேல்
காழியுண் ஞானசம் பந்தன்சொன்ன கருத்தின் றமிழ்மாலை
ஆழியிவ் வையகத் தேத்தவல்லா ரவர்க்குந் தமருக்கும்
ஊழி யொருபெரு மின்பமோர்க்கு முருவு முயர்வாமே —கக

எனக்கு எந்தை மேய வலஞ்சுழி மாநகர் மேல் ஞானசம்பந்தன் சொன்ன தமிழ் மாலையை இவ்வையகத்து ஏத்த வல்லாராகிய அவர்க்கும் (அவரது) தமர்க்கும் ஊழிக்காலம் வரை ஒரு பேரின்பம் வரும். உருவும் (பலவித) உயர்வும் ஆம்.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருமுறை ரு.

பதிகம் கூஅ௰ திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்.

ஓத மார்கட லின்விட முண்டவர்
பூத நாயகர் பொற்கயி லைக்கிறை
மாதொர் பாகன் வலஞ்சுழி யீசனைப்
பாத மேத்தப் பறையுநம் பாவமே —க

கடல் விடம் உண்டவர், பூதநாயகர், கயிலைக்கிறை, மாதோர் பாகன் ஆகிய வலஞ்சுழி ஈசனைப் பாதம் ஏத்த நம் பாவம் பறையும்.

ஓதம்-அலை. பூதநாயகர் - உயிர்கட்குநாயகர். ஐம்பூதங்களிலும் எழுந்தருளி யிருக்கின்ற நாயகர் என்றுமாம். பறையும்-நீங்கும்.

கயிலை நாதன் கறுத்தவர் முப்புரம்
எயில்க டீயெழ வெல்வல வித்தகன்
மயில்க ளாலும் வலஞ்சுழி யீசனைப்
பயில்கி லார்சிலர் பாவித் தொழும்பரே —உ

கயிலை நாதன், கறுத்தவருடைய முப்புர எயில்கள் தீ யெழ வெல் லுதல் வல்ல வித்தகன், வலஞ்சுழியீசன் ஆகிய இறைவனைப் பயில் கிலாராகிய சிலர் பாவத்தையுடைய தொழும்பர்.

கறுத்தவர்-சினத்தையுடைய முப்புராரிகள். ஆலுதல்-ஆரவாரித் தல். தொழும்பர்—ஈனத் தொழில் புரிபவர்.

இளைய காலமெம் மானை யடைகிலாத்
துளையி லாச்செவித் தொண்டர்கா ளும்முடல்
வளையுங் காலம் வலஞ்சுழி யீசனைக்
களைக ணாகக் கருதிநீ ருய்ம்மினே —௩

இளைய காலத்திலேயே எம்மானை அடைகிலாத, (கேள்விச் சலாகையால் துளைக்கப்பெறாத) துளையிலாத செவியையுடைய தொண்டர்களே, உம் உடல் (மூப்பால்) வளையுங் காலத்திலாவது வலஞ்சுழி யீசனைக் களைகணாகக் கருதி நீர் உய்ம்மினே.

இளைய காலம்-இளமைப் பருவம். உடல் வளையும் காலம்-மூப்புப் பருவம். களைகண்—பற்றுக்கோடு.

நறைகொள் பூம்புனல் கொண்டெழு மாணிக்காய்க்
குறைவி லாக்கொடுங் கூற்றுதைத் திட்டவன்
மறைகொ ளாவன் வலஞ்சுழி மேவிய
இறைவ னையினி யென்றுகொல் காண்பதே —௪

பூவோடு கூடிய புனலைப் (பூசனைக்காகக்) கொண்டெழு மாணிக்காகக் கூற்றுதைத்திட்டவனும் மறையைக் கொண்ட நாவனும் ஆகிய வலஞ்சுழி மேவிய இறைவனை (இப்பொழுது காணாமல்) இனி என்று கொல் காண்பது?

நறை-தேன். மாணி-மார்க்கண்டேயன்,

விண்ட வர்புர மூன்று மெரிகொளத்
திண்டி றற்சிலை யாலெரி செய்தவன்
வண்டு பண்முர லுந்தண் வலஞ்சுழி
அண்ட னுக்கடி மைத்திறத் தாவனே —௫

மூன்று புரங்களும் எரியைக் கொளச் சிலையோடு (நின்று) எரி செய்தவனும், வலஞ்சுழி அண்டனும் ஆகிய இறைவனுக்கு (யான்) அடிமைத்திறத்தில் ஆவேன்.

விண்டவர்-வேறுபட்டவராகிய திரிபுரத்தவர். சிலையால் என்பதில் ஆல் உடனிகழ்ச்சிப் பொருளது. நின்று என்று ஒருவினை வருவிக்கப்பட்டது. அண்டன்-அண்டங்களை யாளும் தேவன்.

படங்கொள் பாம்பொடு பான்மதி யஞ்சடை
அடங்க வாழவல் 'லானும்பர் தம்பிரான்
மடந்தை பாகன் வலஞ்சுழி யானடி
அடைந்த வர்க்கடி மைத்திறத் தாவனே —சா

பாம்பொடு மதி சடைஅடங்க வாழவல்லானும், உம்பர் தம்பிரானும், மடந்தைபாகனும் ஆகிய வலஞ்சுழியான் அடியை அடைந்த அடியார்களுக்கு (யான்) அடிமைத் திறத்து ஆவேன்.

உம்பர்—மேலிடத்தவராகிய தேவர்கள்.

நாக்கொண் டுபா வும்மடி யார்வினை
போக்க வல்ல புரிசடைப் புண்ணியன்
மாக்கள் சோலை வலஞ்சுழி யீசன்றன்
ஏக்கொ ளப்புர மூன்றெரி யானவே —எ

பாவும் அடியார் வினையைப் போக்கவல்ல புண்ணியனாகிய வலஞ்சுழி ஈசன் தன் ஏவைக்கொள்ளவே, மூன்று புரமும் எரியாயின.

மா-வண்டும், பெருமையுமாம். ஏ-அம்பு.

தேடு வார்பிர மன்றிரு மாலவர்
ஆடு பாத மவரு மறிகிலார்
மாட வீதி வலஞ்சுழி யீசனைத்
தேடு வானுறு கின்றதென் சிந்தையே —அ

பிரமன் திருமாலவர் தேடுவாராய்த் (தொடங்கி) ஆடுகின்ற பாதத்தை அவரும் அறிகிலார். வலஞ்சுழியீசனை என் சிந்தை தேடுவான் உறுகின்றது.

அவரும் என்னுஞ்சுட்டு அப்பேர்ப்பட்டவரும் என்னும் பொருளது.

கண்ப னிக்குங்கை கூப்புங்கண் மூன்றுடை
நண்ப னுக்கெனை நான்கொடுப் பேனெனும்
வண்பொ னித்தென் வலஞ்சுழி மேவிய
பண்ப னிப்பொனைச் செய்த பரிசிதே —௯

(நம் தலைவி) கண்பனிக்கும், கைகூப்பும், "கண் மூன்றுடை நண்பனுக்கு என்னை நான் கொடுப்பேன்" என்னும்; பொன்னித் தென்வலஞ்சுழியில் மேவிய பண்புடையோன் இப்பொன்போன்ற (தலைவியைச் செய்த) பரிசிது.

இலங்கை வேந்த னிருபது தோளிற
நலங்கொள் பாதத் தொருவிர லூன்றினான்
மலங்கு பாய்வயல் சூழ்ந்த வலஞ்சுழி
வலங்கொள் வாரடி யென்றலை மேலவே —௰

இலங்கை வேந்தனுடைய இருபது தோள்களும் இற பாதலத்து ஒரு விரல் ஊன்றினான் (எழுந்தருளியிருக்கும்) வலஞ்சுழியை வலங் கொள்வார் திருவடிகள் என் தலைமேலவே.

இற-முறிய. மலங்கு-ஒரு வகை மீன்.

திருச்சிற்றம்பலம்.

பதிகம் உஅச. பொது.

க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்
புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்
வலிவல மாற்பேறு வாய்மூர் வைகல்
வலஞ்சுழி வாஞ்சிய மருகல் வன்னி
நிலமலிநெய்த் தானத்தோ டெத்தா னத்து
நிலவுபெருங் கோயில்பல கண்டாற் றொண்டீர்
கலவலிமிக் கோனைக்கால் விரலாற் செற்ற
கயிலாய நாதனையே காண லாமே

திருச்சிற்றம்பலம்.

பதிகம் உஅசூ. திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அலையார் புனற்கங்கை நங்கை காண
வம்பலத்தி லருநட்ட மாடி வேடந்
தொலையாத வென்றியார் நின்றி யூரு
நெடுங்களமு மேவி விடையை மேல்கொண்
டிலையார் படைகையி லேந்தி யெங்கு
மிமையவரு முமையவளு மிறைஞ்சி யேத்த
மலையார் திரளருவிப் பொன்னி சூழ்ந்த
வலஞ்சுழியே புக்கிடமா மருவி னாரே. —

புனல் வடிவமாயுள்ள கங்கையாகிய நங்கைகாண அம்பலத்திலே அரிய நட்டம் ஆடி, (அந்நடன) வேடம் தொலையாத வென்றியாராகிய (இறைவன்), நின்றியூர், நெடுங்களம் (என்னும் தலங்களை) மேவி, விடையை மேல்கொண்டு, படைகையிலேந்தி இமையவரும் உமையவளும் இறைஞ்சி ஏத்த வலஞ்சுழியே புக்கிடமா மருவினார்.

நட்டம்-நடனம். உ—

திருச்சிற்றம்பலம்.

திருக்கொட்டையூரும் திருவலஞ்சுழியும்.

திருச்சிற்றம்பலம்.

கருமணிபோற் கண்டத் தழகன் கண்டாய்
கல்லா னிழற்கீ ழிருந்தான் கண்டாய்
பருமணிமா நாகம் பூண்டான் கண்டாய்
பவளக் குன்றன்ன பரமன் கண்டாய்
வருமணிநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் வரதன் கண்டாய்
குருமணிபோ லழகமருங் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் றானே. —க

வரதன்—வரமளிப்போன். குருமணிபோல் உறையுங் கோமான் என்று கூட்டுக. குருமணி—ஒளி அமைந்த மாணிக்கமணி.

கலைக்கன்று தங்கு கரத்தான் கண்டாய்
கலைபயில்வோர் ஞானக்கண் ணானன் கண்டாய்
அலைக்கங்கை செஞ்சடைமே லேற்றான் கண்டாய்
அண்ட கபாலத்தப் பாலான் கண்டாய்
மலைப்பண்டங் கொண்டு வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியின் மேவிய மைந்தன் கண்டாய்
குலைத்தெங்கஞ் சோலைசூழ் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் றானே. —உ

செஞ்சடைமேல் கங்கையை ஏற்றான் என்று கூட்டுக. அண்ட கபாலம்—வான் கோளத்தின் மேற்பகுதி. மலைப்பண்டம்—அகில், மிளகு; கோட்டம், தக்கோலம், குங்குமம் என்ற ஐவகை.

செந்தா மரைப்போ தணிந்தான் கண்டாய்
சிவன்கண்டாய் தேவர் பெருமான் கண்டாய்
பந்தாடு மெல்விரலாள் பாகன் கண்டாய்
பாலோடு நெய்தயிர்தே னாடி கண்டாய்
மந்தார முந்தி வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியின் மன்னு மணாளன் கண்டாய்
கொந்தார் பொழில்புடைசூழ் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் றானே. —ங

பொடியாடு மேனிப் புனிதன் கண்டாய்
புட்பாகற் காழி கொடுத்தான் கண்டாய்
இடியார் கடுமுழக்கே றூர்ந்தான் கண்டாய்
எண்டிசைக்கும் விளக்காகி நின்றான் கண்டாய்
மடலார் திரைபுரளுங் காவி ரிவாய்
வலஞ்சுழியின் மேவிய மைந்தன் கண்டாய்
கொடியாடு நெடுமாடக் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் றானே. —ச

புட்பாகன்—கருடவூர்தியையுடைய திருமால்.

அக்கரவ மரைக்கசைத்த வம்மான் கண்டாய்
யருமறைக ளாறங்க மானான் கண்டாய்
தக்கனது பெருவேள்வி தகர்த்தான் கண்டாய்
சதாசிவன்காண் சலந்தரனைப் பிளந்தான் கண்டாய்
மைக்கொண்மயிற் றழைகொண்டு வருநீர்ப்பொன்னி
வலஞ்சுழியான் கண்டாய் மழுவன் கண்டாய்
கொக்கமரும் வயல்புடைசூழ் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் றானே. —ரு

அக்கரவம்—சங்குபோன்ற வெண்ணுகம். அன்றியே 'அக்கு' கண்ணென்று கொண்டு கண்ணையுடைய பாம்பு என்றலும் ஒன்று. அசைத்தல்—கட்டுதல். மயிற்றழை—மயிற்பீலி.

சண்டனை நல் லண்டர்தொழச் செய்தான் கண்டாய்
சதாசிவன் கண்டாய் சங்கரன்றான் கண்டாய்
தொண்டர்பலர் தொழுதேத்துங் கழலான் கண்டாய்
சுடரொளியாய்த் தொடர்வரிதாய் நின்றான் கண்டாய்
மண்டுபுனற் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாமுனிவர் தம்முடைய மருந்து கண்டாய்
கொண்டறவழ் கொடிமாடக் கொட்டையூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் றானே. —சு

சண்டன்—சண்டேசுர நாயனார்.

அணிவரியான் கண்டாய் யமலன் கண்டாய்
அவிநாசி கண்டா யண்டத்தான் கண்டாய்
பணமணிமா நாக முடையான் கண்டாய்
பண்டரங்கன் கண்டாய் பகவன் கண்டாய்
மணல்வருநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாதவற்கு நான்முகற்கும் வரதன் கண்டாய்
குணமுடைநல் லடியார்வாழ் கொட்டையூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் றானே. —எ

அவிநாசி—நாசத்தொடு கூடாதவர். பண்டரங்கன்—பாண்டரங்கக் கூத்தாடியவன். பாண்டரங்கமாவது கூத்துப் பதினொன்றனுள் திரிபுரத்தை அழித்தபோது சிவபிரான் வெண்ணீறணிந்தாடியது. பகவன்—பகம் என்னும் ஆறுகுணங்களை யுடையவர்.

விரைகமழு மலர்க்கொன்றைத் தாரான் கண்டாய்
வேதங்க டொழநின்ற நாதன் கண்டாய்
அரையதனிற் புள்ளியத ளுடையான் கண்டாய்
யழலாடி கண்டா யழகன் கண்டாய்
வருதிரைநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
வஞ்சமனத் தவர்க்கரிய மைந்தன் கண்டாய்
குரவமரும் பொழில்புடைசூழ் கொட்டையூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் றானே. —அ

தளங்கிளருந் தாமரையா தனத்தான் கண்டாய்
தசரதன்றன் மகனசைவு தவிர்த்தான் கண்டாய்
இளம்பிறையு முதிர்சடைமேல் வைத்தான் கண்டாய்
யெட்டெட் டிருங்கலையு மானான் கண்டாய்
வளங்கிளர்நீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாமுனிக டொழுதெழுபொற் கழலான் கண்டாய்
குளங்குளிர்செங் குவளைகிளர் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் றானே. —கூ

தசரதன்றன் மகனசைவு—இராமனுடைய தளர்வு.

விண்டார் புரமூன் றெரித்தான் கண்டாய்
விலங்கலில்வல் லரக்கனுட லடர்த்தான் கண்டாய்
தண்டா மரையானு மாலுந் தேடத்
தழற்பிழம்பாய் நீண்ட கழலான் கண்டாய்
வண்டார்பூஞ் சோலைவலஞ் சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் மறையோ டங்கம்
கொண்டாடு வேதியர்வாழ் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் றானே. —ய

விண்டார்—வேறுபட்டவர்களாகிய பகைவர்.

கொட்டையூர் இறைவன் பெயர்: கோடீசர்
இறைவி பெயர்: பந்தாடுநாயகி

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

திருமுறை கக

நக்கீரதேவனர் அருளிய

திருவலஞ்சுழி மும்மணிக்கோவை,

திருச்சிற்றம்பலம்

வணங்குதும் வாழி நெஞ்சே புணர்ந்துடன்
பொருகடல் முகந்து கருமுகிற் கணம்நற்
படவர வொடுங்க மின்னிக் குடவரைப்
பொழிந்து கொழித்திழி அருவி குணகடல்
மடுகக்குங் காவிரி மடந்தை வார்புனல்
உடுத்த மணிநீர் வலஞ்சுழி
அணிநீர்க் கொன்றை அண்ணல தடியே —க

நெஞ்சே, வலஞ்சுழி அண்ணலது அடியே வணங்குதும் என்று கூட்டுக. கருமுகிற்கணம் உடன் புணர்ந்து கடல் முகந்து, அரவு ஒடுங்க மின்னி, குடவரைப் பொழிய, அதனால் கொழித்தெழுகின்ற அருவியைக் குண கடலில் மடுப்பிக்குங் காவிரி; அக்காவிரி மடந்தை பின் புனல் உடுத்த வலஞ்சுழி என்று கூட்டுக.

முகிற்கணம்-மேகக் கூட்டம். குடவரை—மேற்றிசையிலுள்ள குடகுமலை, பொழிந்து என்ற செய்தென் எச்சத்தைச் செயவென் எச்சமாக்குக. மடுக்கும் பிறவினை. அல்லது அருவியோடு குணகடல் மடுக்கும் காவிரி என்று பொருள் கூறி, மடுக்கும் என்பதைத் தன்வினை யாகவுங்கொள்ளலாம்.

அடிப்போது தந்தலைவைத் தவ்வடிகள் உன்னிக்
கடிப்போது கைக்கொண்டார் கண்டார் முடிப்போதா
வாணுகஞ் சூடும் வலஞ்சுழியான் வானோருங்
காணாத செம்பொற் கழல் —உ

(உருவத் திருமேனி தாங்கி ஆலயத்துள் எழுந்தருளியிருக்கு அருட்குறியாகிய இறைவனது,) திருவடிப்போதைத் தம் தலைக்கண் வைத்து அவ்வடிகளை உன்னி, போது கைக்கொண்ட தொண்ட வலஞ்சுழியானுடைய கழலாகிய (திருவடி ஞானத்தைக்) கண்டா என்று கூட்டுக.

போது-மலர். கடி—வாசனை. முடிப்போதாக வாள் நாகம் சூடு வலஞ்சுழியான் என்க, கழல் திருவடி ஞானத்தை உணர்த்தலால் ஆ பெயர்.

கழல்வண்ண முஞ்சடைக் கற்றையும் மற்றவர் காணகில்லா
தழல்வண்ணங் கண்டே தளர்ந்தார் இருவரந் தாமரையின்
நிழல்வண்ணம் பொன்வண்ணம் நீர்நிற வண்ணம் நெடிய
வண்ணம்
அழல்வண்ணம் முந்நீர் வலஞ்சுழி யாள்கின்ற அண்ணலே

தாமரை வண்ணமும் பொன் வண்ணமும் நீர் வண்ணமும் நெடி வண்ணமும் அழல் வண்ணமும் ஆகிய பல வண்ணங்களைப் பெற்றுள் வலஞ்சுழி ஆள்கின்ற அண்ணலே, பிரம விட்டுணுக்களாகிய இருவ கழல் வண்ணமும் சடைக்கற்றையும் காணகில்லாமல் தழல் வண் மாகிய ஒன்றைக்கண்டே தளர்ந்தார் (அவர் பல வண்ணங் காணுமா எங்ஙனம்?)

நிழல்-குளிர்ச்சி.

அண்ணலது பெருமை கண்டனங் கண்ணுதற்
கடவுள் மன்னிய தடமல்கு வலஞ்சுழிப்
பனிப்பொருட் பயந்து பல்லவம் பழிக்குந்
திகழொளி முறுவல் தேமொழிச் செவ்வாய்த்
திருந்திருங் குழலியைக் கண்டு
வருந்தியென் உள்ளம் வந்த அப்போதே —சு

கண்ணுதற் கடவுள் மன்னிய வலஞ்சுழியின்கண் (முகமதியால்) பனிப்பொருளைப் பயந்து, (திருமேனியழகால்) பல்லவத்தைப் பழிக்கும் முறுவலும் மொழியும் வாயும் உடைய குழலியாகிய (தலைவியைக்) கண்டு என் உள்ளம் வருந்தி வந்த அப்பொழுது அண்ணலாகிய தலைவனது பெருமையைக் கண்டனம். இது பாங்கன் கூற்று. தலைவனை வியந்த தென்னும் துறை.

போதெலாம் பூங்கொன்றை கொண்டிருந்த பூங்கொன்றைத்
தாதெலாந் தன்மேனித் தைவருமால்—தீதின்
மறைக்கண்டன் வானேன் வலஞ்சுழியான் சென்னிப்
பிறைக்கண்டங் கண்டணைந்த பெண் —ரு

மறைக்கண்டனும், வானேனும் ஆகிய வலஞ்சுழியானது சென்னிப் பிறைக்கண்டத்தைக் கண்டு அணைந்த பெண்ணானவள் போதினுள் எல்லாம் பூங்கொன்றையையே கொண்டு, இருந்த பூங்கொன்றைத் தாதெல்லாவற்றையும் தனது மேனியில் தைவரும். தலைவி பொன்மேனி யுற்றாள் என்க.

தாது—மகரந்தப்பொடி. தைவருதல்-தடவுதல். பிறைக்கண்டம்-பிறையாகிய துண்டம்

பெண்கொண் டிருந்து வருந்துங்கோ லாம்பெரு மான் திருமால்
வண்கொண்ட சோலை வலஞ்சுழி யான்மதி சூடிநெற்றிக்
கண்கொண்ட கோபமகலந்தன போல்மின்னிக் கார்ப்புனத்துப்
பண்கொண்டு வண்டினம் பாடநின் றூர்த்தன பன்முகிலே—சு

பன்முகிலானது பெருமானும் மதிசூடியும் ஆகிய வலஞ்சுழியானது நெற்றிக்கண் கொண்ட கோபம் கலந்தனபோல மின்னி, கரிய புனத்திலே வண்டினம் பாட நின்று ஆர்த்தன. இதனைப் பெண் (தலைவி கண்டு) கொண்டிருந்து வருந்துங் கொலாம் என்று கூட்டுக. இது தலைவன் பாசறைப் புலம்பல் என்னும் துறை. திருமாவின் வண்ணத்தைக் கொண்ட சோலை,

முகிற்கணம் முழங்க முனிந்த வேழம்
எயிற்றிடை யடக்கிய வெகுளி யாற்ற
அணிநடை மடப்பிடி யருகுவந் தணைதருஞ்
சாரல் தண்பொழில் அணைந்து சோருந்
தேனுகு தண்டலை செறிதரு வனத்திற்
சருவரி வாரல்எம் பெருமநீர் மல்கு
சடைமுடி ஒருவன் மருவிய வலஞ்சுழி
அணிதிகழ் தோற்றத் தங்கயத் தெழுந்த
மணிநீர்க் குவளை யன்ன
அணிநீர்க் கருங்கண் ஆயிழை பொருட்டே —எ

சடைமுடி ஒருவன் மருவிய வலஞ்சுழியினிடமாக கயத்து எழுந்த குவளையன்ன கருங்கண் ஆயிழை பொருட்டாக, எம்பெரும, வனத்தில் சருவரிக் காலத்தில் வாராதே என்று கூட்டுக.

சருவரி—இரவு.

முகிற்கணம் முழங்க முனிந்த வேழமானது, எயிற்றிடை அடக்கிய வெகுளியோடு பிடியகுரு வந்து அணைதரும் சாரல் என்க. அச்சாரலும் தண்பொழிலும் அணைந்து சோரும் தேனும் உகும் தண்டலையும் செறிதரும் வனம் என்க.

பொருட்டக்கீர் சில்பலிக்கென் றில்புகுந்தீ ரேனும்
அருட்டக்கீர் யாதுமூ ரென்றேன்—மருட்டக்க
மாமறைய மென்றார் வலஞ்சுழிநம் வாழ்வென்றார்
தாமறைந்தார் காணேன்கைச் சங்கு —அ

"எல்லாப் பொருளையும் உடைய தக்கீரே, சில பலிக்கென்று இல்லின் கண் புகுந்தீரேனும் (பிச்சையெடுப்பார்க்குச் சொந்தமாகிய ஊர் இராதென்று கருதாமல்) அருளை உடைய தக்கீரே, யாது உம்மூர்" என்றேன். அவர் "மாமறையில் இருப்போம் வலஞ்சுழியே நாம் வாழுமிடம்" என்றார். தாம் மறைந்தார். (உடனே) என் கைச்சங்கு காணேன்.

தக்கீர்—தக்கவரே. உம்+ஊர் என்பது தனிக்குறில்முன் உயிர்வர ஒற்றிரட்டாமல் உமூர் என்றாயிற்று. அன்றியே செய்யுள் விகாரம் என்றும் கூறலாம். சங்கு-வளையல்.

சங்கம் புரளத் திரைசுமந் தேறுங் கழியருகே
வங்கம் மலியுந் துறையிடைக் காண்டிர் வலஞ்சுழியா
றங்கம் புலனைந்து மாகிய நான்மறை முக்கணக்கன்
பங்கன் றிருவர்க் கொருவடி வாகிய பாவையையே —கூ

பாவையைக் கழியருகே துறையிடைக் காண்டிர் என்று கூட்டுக. இப்பாட்டில் நான்காவது அடிக்குத் தெளிவாய்ப் பொருள் விளங்கவில்லை.

பாவை யாடிய துறையும் பாவை
மருவொடு வளர்ந்த வன்னமு மருவித்
திருவடி யடியேன் தீண்டிய திறனுங்
கொடியேன் உள்ளங் கொண்ட சூழலும்
கள்ளக், கருங்கண் போன்ற காவியும நெருங்கி
அவளே போன்ற தன்றே தவளச்
சாம்பலம் பொடிசாந் தெனத்தை வந்து

தேம்பல் வெண்பிறை சென்னிமிசை வைத்த
வெள்ளேற் றுழவன் வீங்குபுனல் வலஞ்சுழி
வண்டினம் பாடுஞ் சோலைக்
கண்ட வம்மஅக் கடிபொழில் தானே —ய

வெள்ளேற்றுழவனது வலஞ்சுழிச் சோலையுள் (தலைவியைக்) கண்ட அப்பொழில்தான் அப்பாவை ஆடிய துறையும் அப்பாவை மருவுதலுடன் வளர்ந்த அன்னமும் மருவப்பெற்று, அடியேன் இருவடி தீண்டிய திறனும் கொடியேனது உள்ளத்தைக் கொண்ட சூழலும் கண்போன்ற காவியும் நெருங்கப்பெற்று அவளே போன்றது எனக் கூட்டுக. இது தலைவன் கூற்று.

திறன்—ஒரு சாரான இடம். சூழல்—மரமும் செடியும் கொடியும் பொதுளிச் சூழ்ந்துள்ள இடம். மருவி நெருங்கி என்னும் எச்சங்களைச் செயவெனெச்சமாக்குக. தேம்பல்—வாட்டம்.

தானேறு மானேறு கைதொழேன் தண்சடைமேல்
தேனேறு கொன்றைத் திறம்பேசேன் - வானேறு
மையாருஞ் சோலை வலஞ்சுழியான் என்கொலென்
கையார் வளைகவர்ந்த வாறு —கக

தான் ஏறும் ஆனேற்றையும் யான் கைதொழேன்; சடைமேல் கொன்றைத்திறமும் பேசேன். (அங்ஙனமிருக்க) வலஞ்சுழியான் என்கை ஆர்வளை கவர்ந்தவாறு என்கொல்? இது தலைவி கூற்று.

வான் ஏறும்மை-மேகம்.

ஆறுகற்றைச்சடைக் கொண்டொர்ஒற்றைப்பிறை சூடிமற்றைக்
கூறுபெண் ணுயவன் கண்ணூர் வலஞ்சுழிக் கொங்குதங்கு
நாறுதண் கொம்பரன் னீர்களின் னேநடந் தேகடந்தார்
சீறுவென் றிச்சிலைக் கானவர் வாழ்கின்ற சேண்நெறியே—கஉ

வலஞ்சுழிக் கொம்பான்னீர்களே, சடையில் ஆறுகொண்டு, பிறைசூடி, கூறுபெண்ணுய கடவுளது கண்ணுகிய சூரிய சந்திரரை ஒத்த தலைவனும் தலைவியுமாகிய இருவர், கானவர் வாழ்கின்ற சேண் நெறியை இன்னே நடந்தே கடந்தார். என்று கூட்டுக. இது கண்டோர் செவிலித்தாயரை நோக்கித் தலைவன் தலைவியரிருவரும் சேண் சென்றமை கூறியது.

கொங்கு ஈண்டுதேன். கானவர்-வேடர். சேண்நெறி-தூரமாகிய வழி.

நெறிதரு குழலி விறலியொடு புணர்ந்த
செறிதரு தமிழ்நூற் சீரியாழ்ப் பாண
பொய்கை யூரன் புதுமணம் புணர்தர
மூவோ மூன்று பயன்பெற் றனமே —கரு.
நீயவன், புனைதார் மாலை பொருந்தப் பாடி
இல்லதும் உள்ளதும் சொல்லிக் கல்லல்
வாசகம் வழாமற் பேச வண்மையில்
வானர மகளிர் வான்பொருள் பெற்றனை
அவரேல், எங்கையர் கொங்கைக் குங்குமந் தழீஇ
விழையா இன்பம் பெற்றனர் யானேல்
அரனமர்ந் துறையும் மணிநீர் வலஞ்சுழிச்
சுரும்பிவர் நறுவயற் சூழ்ந்தெழு கரும்பில்
தீநீ ரன்ன வாய்நீர் சோருஞ்
சிலம்புகுரற் சிறுபறை பூண்ட
வலம்புகுரற் கிங்கிணிக் களிறுபெற் றனனே

பாண. ஊரன் புது மணம் புணர்தர, (நீயும் அவரும் யானுமாகிய) மூவோமும் மூன்று பயன் பெற்றனம். நீ அவன் மாலை பொருந்தப் பாடி, இல்லதும் உள்ளதும் சொல்லி, கல்லல் வாசகத்தை வழாமற் பேச அதனால், வண்மையில்லாத வானர மகளிரது வான்பொருள் பெற்றனை; அவரேல், எங்கையரது கொங்கைக் குங்குமத்தைத் தழீஇ (அறிஞர்) விழையா இன்பம் பெற்றனர்; ஆனால் யானேல், அரன் அமர்ந்துறையும் வலஞ்சுழி கரும்பில் தீம் நீரன்ன வாய் நீர் சோரும்; சிறு பறை பூண்ட, கிண்கிணியணிந்த களிறுபோன்ற குழந்தையைப் பெற்றேன். இது தலைவி கூற்று.

கல்லல் வாசகம்-கலகப்படுத்தும் மொழி. வண்மையில் வானர மகளிர்-கொடுத்தலறியாத வானரர் போன்ற பரத்தையர்.

தனமேறிப் பீர்பொங்கித் தன்னங்கம் வேறாய்
மனம்வேறு பட்டொழிந்தாள் மாதோ—இனமேறிப்
பாடாலம் வண்டலம்பும் பாய்நீர் வலஞ்சுழியான்
கோடாலங் கண்டணைந்த கொம்பு. —கச

வண்டு இனத்துடன் ஏறி பாடாலம் அலம்பும் வலஞ்சுழியானது கோடாலத்தைக் கண்டணைந்த கொம்பையொத்த (தலைவி) தனம் ஏற, பீர் பொங்க, தன் அங்கங்கள் வேறு ஆக மனம் வேறுபட்(செய)லொழிந்தாள். இது தோழி கூற்று. ஏறி. பொங்கி, ஆய், பட்டு என்னும் எச்சங்களைச் செயவெனெச்ச மாக்குக.

பாடலம்—பாதிரி. நீட்டல் விகாரம். கோடாலம்-பிறைபோன்ற மாலை.

கொம்பார் குளிர்மறைக் காடனை வானவர் கூடிநின்று
நம்பா எனவணங் கப்பெறு வானை நகரெரிய
அம்பாய்ந் தவனை வலஞ்சுழி யானைஅண் ணாமலைமேல்
வம்பார் நறுங்கொன்றைத் தாருடை யானை வணங்குதுமே.—கரு

மறைக்காடனை, வானவர் நம்பா என வணங்கப் பெறுவானை' நகர் எரிய அம்பு ஆய்ந்தவனை. வலஞ்சுழியானை, அண்ணாமலையில் வாழும் கொன்றைத் தாருடையானை வணங்குதும்.

நகர்-திரிபுரம்.

திருச்சிற்றம்பலம்.

தனமேறிப் பீர்பொங்கித் தன்னங்கம் வேறாய்
மனம்வேறு பட்டொழிந்தாள் மாதோ—இனமேறிப்
பாடாலம் வண்டலம்பும் பாய்நீர் வலஞ்சுழியாள்
கோடாலங் கண்டணைந்த கொம்பு. —கச

வண்டு இனத்துடன் ஏறி பாடாலம் அலம்பும் வலஞ்சுழியானது கோடாலத்தைக் கண்டணைந்த கொம்பையொத்த (தலைவி) தனம் ஏற, பீர் பொங்க, தன் அங்கங்கள் வேறு ஆக மனம் வேறுபடச் (செய)லொழிந்தாள். இது தோழி கூற்று. ஏறி, பொங்கி, ஆய், பட்டு என்னும் எச்சங்களைச் செயவெனெச்ச மாக்குக.

பாடலம்—பாதிரி. நீட்டல் விகாரம். கோடாலம்-பிறைபோன்ற மாலை.

கொம்பார் குளிர்மறைக் காடனை வானவர் கூடிநின்று
நம்பா எனவணங் கப்பெறு வானை நகரெரிய
அம்பாய்ந் தவனை வலஞ்சுழி யானைஅண் ணாமலைமேல்
வம்பார் நறுங்கொன்றைத் தாருடை யானை வணங்குதுமே.—கரு

மறைக்காடனை, வானவர் நம்பா என வணங்கப் பெறுவானை' நகர் எரிய அம்பு ஆய்ந்தவனை. வலஞ்சுழியானை, அண்ணாமலையில் வாழும் கொன்றைத் தாருடையானை வணங்குதும்.

நகர்-திரிபுரம்.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

௫ திருநின்ற சருக்கம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்

நல்லூரில் நம்பர் அருள் பெற்றுப்போய்ப் பழையாறை
பல்லூர்வெண் தலைக்கரத்தார் பயிலுமிடம் பலபணிந்து
சொல்லூர்வண் தமிழ்பாடி வலஞ்சுழியைத் தொழுதேத்தி
அல்லூர்வெண் பிறையணிந்தார் திருக்குடமூக் கணைந்
திறைஞ்சி

திருநாவுக்கரசர், நல்லூரில் நம்பர் அருள் பெற்றுப்போய், பழையாறையுள் தலைக்கரத்தார் பயிலும் இடம் பல பணிந்து தமிழ் பாடி, வலஞ்சுழியைத் தொழுது ஏத்தி பிறையணிந்தார் திருக்குடமூக்கு அணைந்து இறைஞ்சி.

பல்லூர்வெண்தலை—பற்கள் மேலே ஊன்றியுள்ள வெள்ளிய கபாலம். அல்—மாலைக்காலம்.

௬ வம்பரு வரிவண்டுச் சருக்கம்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம்

மறைவி ளங்குமப் பதியினில் மணிகண்டர் பொற்றாள்
நிறையும் அன்பொடு வணங்கியே நிகழ்பவர் நிலவும்
பிறைஅ ணிந்தவர் அருள்பெறப் பிரசமென் மலர்வண
டறைந றும்பொழில் திருவலஞ் சுழியில்வந் தணைந்தார்

மணிகண்டர்-நீல மணிபோன்ற கண்டத்தினை யுடையவர். நிகழ்பவர்-கண்டு திருஞானசம்பந்தர். பிரசம்-தேன்.

மதிபு ணிந்தவர் வலஞ்சுழி மருவுமா தவத்து
முதிரும் அன்பர்கள் முத்தமிழ் விரகர்தம் முன்வந்
தெதிர்கொள் போழ்தினில் இழிந்தவர் எதிர்செல மதியைக்
கதிர்செய் வெண்முகிற் குழாம்புடை சூழ்ந்தெனக் கலந்தார்

இழிந்து-சிவிகையினின்றும் இறங்கி. அவர்-சம்பந்தர்.

கலந்த அன்பர்கள் தொழுதெழக் கவுணியர் தலைவர்
அலர்ந்த செங்கம லக்கரங் குவித்துடன் அணைவார்
வலஞ்சு ழிப்பெரு மான்மகிழ் கோயில்வந் தெய்திப்
பொலங்கொள் நீள்சுடர்க் கோபுரம் இறைஞ்சிஉட் புகுந்தார்

மருவ லார்புரம் முனிந்தவர் திருமுன்றில் வலங்கொண்
டுருகும் அன்புடன் உச்சிமேல் அஞ்சலி யினராய்த்
திருவ லஞ்சுழி உடையவர் சேவடித் தலத்தில்
பெருகும் ஆதர வுடன்பணிந் தெழுந்தனர் பெரியோர்

மருவலார்புரம்-பகைவர்களின் முப்புரங்கள். திருமுன்றில்-கோயிலின் முகப்பு. ஆதரவு-விருப்பம்.

ஞான போனகர் நம்பர்முன் தொழுதெழு விருப்பால்
ஆன காதலில் அங்கண ரவர்தமை வினவும்
ஊன மில்இசை யுடன்விளங் கியதிருப் பதிகம்
பான லார்மணி கண்டரைப் பாடினார் பரவி

வினவும் திருப்பதிகம்-விண்டெலாம் என்று தொடங்கும் வினவுரைப் பதிகம். பானல் ஆர்-கருங்குவளையை யொத்த.

புலன்கொள் இன்தமிழ் போற்றினர் புறத்தினில் அணைந்தே
இலங்கு நீர்ப்பொன்னி சூழ்திருப் பதியினில் இருந்து
நலங்கொள் காதலின் நாதர்தாள் நாள்தொறும் பரவி
வலஞ்சு ழிப்பெரு மான்தொண்டர் தம்முடன் மகிழ்ந்தார்

புலன்கொள்-மெய்யுணர்வுகொண்ட.

'வலஞ்சுழி யிடமாகக் கொண்டநாதன் மெய்த் தொழில்புரி தொண்டரோ டினி திருந் தமையாலே விண்டொழிந்தன நம்முடை வல்வினை, என்ற சம்பந்தப்பெருமான் வாக்கினை யுட்கொண்டு 'வலஞ்சுழிப்பெருமான் தொண்டர் தம்முடன் மகிழ்ந்தார்' என்று சேக்கிழார் பெருமான் கூறினார்.

மகிழ்ந்த தன்தலை வாழும்அந் நாளிடை வானில்
திகழ்ந்த ஞாயிறு துணைப்புணர் ஓரையுட் சேர்ந்து
நிகழ்ந்த தன்மையில் நிலவும்ஏழ் கடனீர்மை குன்ற
வெகுண்டு வெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில்

அதன் தலை-திருவலஞ்சுழியில்.

ஞாயிறு துணைப்புணர் ஓரையுள் சேர்தலாவது, ஆண் பெண் வடிவாய்க் கூடியிருக்கும் மிதுன இராசியிற் சேர்தலாம். இக்காலம் ஆனி மாதமாம். இது முதுவேனிற் றொடக்கம்.

தண்பு னற்குளிர் கால்நறுஞ் சந்தனத் தேய்வை
பண்பு நீடிய வாசமென் மலர்பொதி பனிநீர்
நண்பு டைத்துணை நகைமணி முத்தணி நாளும்
உண்ப மாதுரி யச்சுவை உலகுளோர் விரும்ப

முதிர்ந்த வேனிற் காலத்தில், குளிர் காலையும், (காற்று) சந்தனத் தேய்வையும், மலர்ப் பொதியையும், பனி நீரையும், நண்புடைய துணையையும், மணியையும், முத்தணியையும் நாளும் உண்பவாகிய மாதுரியச் சுவையையும் உலகுளோர் விரும்ப.

மாதுர்யம்-இனிப்புச் சுவை.

அறல்மலியுங் கான்யாற்றின் நீர்நசைய்ரல் அணையுமான்
பெறல்அரிய புனல்என்று பேய்த்தேரின் பின்தொடரும்
உறையுணவு கொள்ளும்புள் தேமபவயல் இரைதேரும்
பறவைசிறை விரித்தொடுங்கப் பனிப்புறத்து வதியுமால்

அறல் - கருமணல். கான்யாறு - காட்டாறு. நசை - விருப்பம். பேய்த்தேர்-நீர்போல் தோற்றும் கானல். உறை-மழைத்துளி. அதனை உணவாகக் கொள்ளும் புள் வானம்பாடி. தேம்ப-வாட. வயலில் இரை தேடும் பறவைகளெல்லாம் சிறகை ~~விரித்துப் பின்~~ அச்சிறகுகள் ஒடுங்கும்படி குளிர்ந்த இடத்தில் சென்று தங்கும்.

நீணிலைமா ளிகைமேலும் நிலாமுன்றின் மருங்கினிலும்
வாணிழனற் சோலையிலும் மலர்வாவிக் கரைமாடும்
பூணிலவு முத்தணிந்த பூங்குழலார் முலைத்தடத்தும்
காணுமகிழ்ச் சியின்மலர்ந்து மாந்தர்கலந் துறைவரால்.

வாணிழனற்சோலை என்பதை வான் + நிழல் என்று பிரித்துப் பக்கங்களிலே, நிழலருமை அறிதற் பொருட்டுச் சூரியனுடைய வானிய ஒளியையும் தம்மைச்சூழத் தண்ணிழலையும் பெற்று விளங்கும் சோலை என்று பொருள் கொள்க.

மயிலொடுங்க வண்டாட மலர்க்கமல முகைவிரியக்
குயிலொடுங்காச் சோலையின்மென் தளிர்கோதிக் கூவிஎழத்
துயிலொடுங்கா உயிர்அனைத்தும் துயில்பயிலச் சுடர்வானில்
வெயிலொடுங்கா வெம்மைதரும் வேனில்விரி தருநாளில்

கார்காலம் அன்மையின் மயில் ஒடுங்கிற்று. தமக்குரிய வேனிற் காலமாதலின் சோலையின்மேல் குயில்கள் ஒடுங்காதனவாய்த் தளிர் கோதிக் கூவி யெழலாயிற்று. பகலில் துயிலிற் சென்று ஒடுங்காத உயிரனைத்தும் வெயிலின் கொடுமையால் பகலிலேயே துயில.

சண்பைவரும் பிள்ளையார் சடாமகுடர் வலஞ்சுழியை
எண்பெருகத் தொழுதேத்திப் பழையாறை எய்துதற்கு
நண்புடைய அடியார்க ளுடன்போத நடந்தருளி
விண்பொருநீள் மதிளாறை மேற்றளிசென் றெய்தினார்.

என் - இறைவனுடைய திருவருளாகிய எண்ணம்.

திருச்சிற்றம்பலம்.

அருணகிரிநாதர் திருவாய்மலர்ந்தருளிய

திருப்புகழ்.

நிறுக்குஞ் சூதன மெய்த்தன முண்டைகள்
கருப்பஞ் சாறொட ரைத்துள வுண்டைகள்
நிழற்கண் காணவு ணக்கிம ணம்பல —தடவாமேல்
நெருக்கும் பாயலில் வெற்றிலை யின்புறம்
ஒளித்தன் பாகஅ ளித்தபி னிங்கெனை
நினைக்கின் றீரிலை மெச்ச லிதஞ்சொலி —யெனவோதி
உறக்கண் டாசைவ லைக்குள மூழ்கிட
விடுக்கும் பாவிகள் பொட்டிகள் சிந்தனை
யுருக்குந் தூவைகள் செட்டைகு ணந்தனி —லுழலாமே
உலப்பின் றூறெனு மக்கர முங்கழல்
கடப்பந் தாருமு கப்ரபை யுந்தினம்
உளத்தின் பார்வையி டத்தினி னைந்திட —அருள்வாயே
கருக்குந் தூயமி டற்றன ருஞ்சிலை
யெடுக்குந் தோளனி றத்தம ரெண்கரி
கடக்குந் தானவ னைக்கொ லரும்புயன் —மருகோனே
கனத்தஞ் சாபுரி சிக்கல்வ லஞ்சுழி
திருச்செங் கோடுஇ டைக்கழி தண்டலை
களர்ச்செங் காடுகு றுக்கைபு றம்பயம் —அமர்வோனே
சிறுக்கண் கூர்மத அத்திச யிந்தவ
நடக்குந் தேரனி கப்படை கொண்டமர்
செலுத்தும் பாதகன் அக்ரமன் வஞ்சனை —யுருவானேன்
செருக்குஞ் சூரக லத்தையி டந்துயிர்
குடிக்குங் கூரிய சத்திய மர்ந்தருள்
திருச்செந் தூர்நக ரிக்குள் விளங்கிய —பெருமாளே

கதுக்கும் தூய யிடற்றினராகிய சிவனையும் அவர் வாழும் கயிலை யாகிய சிலையையும் எடுக்கும் தோளனும், நிறத்தினுலே (மார்பு) எண்கரி (திக்கு யானைகள்) கடக்கும் தானவனும் ஆகிய இராவணனைக் கொல் லும் அரும்புயனுகிய சிராமன் மருகோனே,

தஞ்சாபுரி சிக்கல் திருவலஞ்சுழி முதலான தலங்களில் அமர் வோனே.

அத்தியும், சயிந்தவமும் (குதிரை) தேரும், அனிகமும் (காலாள்) ஆகிய படைகொண்டு அமர் செலுத்தும் பாதகனும், அக்ரமனும், வஞ்சனையுருவானோனும் ஆகிய சூரன் அகலத்தை (மார்பை) இடந்து உயிர்குடிக்கும் கூரிய சத்திவேலுடன் திருச்செந்தூர் நகரிக்குள் விளங் கிய பெருமானே.

முண்டைகளும் பாவிகளும் பொட்டிகளும் தூவைகளும் ஆகிய பரத்தையருடைய செட்டைக் குணத்தில் உழலாமே,

ஆறெனும் அக்கரமும், கடப்பந்தாரும், முகப்பிரபையும் உளத்தின் பார்வையிடத்தில் நினைத்திட அருள்வாயே.

உளத்தின் பார்வை-மனக்கண்.

பேய்க் கரூப்பஞ்சாறு கூட்டி அரைத்த வசிய மருந்துண்டையை நிழலிலுலர்த்தி மணப்பொருள் தடவிப் படுக்கையில் வெற்றிலையின்புறம் ஒளித்து அளித்த பிறகு "எனை நினைக்கின் றீரிலை இதஞ்சொலி மெச்சா நீர்" என ஓதி ஆசை வலைக்குளழுந்திட விடுக்கும் பாவிகள் என்.

முண்டைகள்-தலைவாற்றவர். பொட்டிகள்-கீழ்மக்கள். தூவை கள்-காரியுமிழந்தக்கவர். செட்டை-மூதேவி. சேட்டை என்பதன் விகாரம்.

மகர குண்டல மீதே மோதுவ
வருண பங்கய மோபூ வோடையில்
மருவு செங்கழு நீரோ நீவிடு —வடிவேலோ

மதன்வி டுங்கணை யோவாளோ சில
கயல்கள் கெண்டைக ளோசே லோகொலை
மறலியென்பவ னோமா னோமது —நுகர்கீத

முகர வண்டின மோவான் மேலெழு
நிலவ ருந்துபு ளோமா தேவருண்
முதிய வெங்கடு வோதே மாவடு —வகிரோபார்

முடிவெ னுங்கட லோயா தோவென
உலவு கண்கொடு நேரே சூறைகொள்
முறைய றிந்தப சாசே போல்பவர் —உறவாமோ

நிகரில் வஞ்சக மாரீ சாதிகள்
தசமு கன்படை கோடா கோடிய
நிருத ரும்பட வோரே வேவியெ —அடுபோர்செய்

நெடிய னங்கனு மானோ டேயெழு
பதுவெ ளங்கவி சேனே சேவித
நிருப னம்பரர் கோமான் ராகவன் —மருகோனே

சிகர உம்பர்கள் பாகீ ராதிகள்
பிரபை யொன்றுபி ராசா தாதிகள்
சிவச டங்கமோ டீசா னுதிகள் —சிவமோனர்

தெளிய மந்த்ரக லாபா யோகிக
ளயல்வி ளங்குசு வாமீ காமரு
திருவ லஞ்சுழி வாழ்வே தேவர்கள் —பெருமாளே.

இராகவன் மருகோனே. கலாபா, சுவாமீ வலஞ்சுழி வாழ்வே, பெருமாளே, பங்கயமோ கழுநீரோ வடிவேலோ மதன்கணையோ வாளோ கயல்களோ கெண்டைகளோ சேலோ மறலியோ மானோ வண்டினமோ நிலவருந்துபுள்ளோ மாதேவருண்கடுவோ மாவடு வகிரோ கடலோ யாதோவென உலவுகின்ற கண்களைக் கொண்டு (தம்மை விரும்பியவர்களை)ச் சூறை கொள்ளும் முறையறிந்த பசாசே போல்பவர் உறவாமோ என்று கூட்டுக.

நிலவருந்துபுள்-சகோரம்.

நீதி வெண்பா.

இதமகித வார்த்தை யெவர்க்கேனு மேலாம்
இதமெனவே கூறலித மன்றே—இதமுரைத்த
வாக்கினு லேரண்ட மாமுனியும் சோழனெடு
தேக்குநீர் வீழ்ந்தொழிந்தான் றேர்ந்து.

உ

அபிதான சிந்தாமணி

பக்கம் கரு௪௬ல்

காவிரித் தென்கரைத் தலங்களில்
இருபத்தைந்தாவதாய் விளங்குவது

திருவலஞ்சுழி.

அங்கு எழுதப்பட்ட வரலாறுவது "இந்திரன் பொருட்டு வந்த காவிரி ஈண்டுச் சுழியில் ஆழ, இந்திரன் வேண்டு கோளால் வரகண்டமுனிவர் அதில் ஆழ, அது பாதலம் செல்லாது பிரவகித்தது. இத் தலத்து இந்திரனாற் பூசிக் கப்பட்ட கணபதி அவன் மீண்டு எடுக்க வாராமல் அழுந்தி யிருக்கின்றனர். சுவாமி பெயர் சித்தீசர். தேவி பெயர் நித்தியநாயகி. ஞானசம்பந்தர் பதிகம் ௩, நாவுக்கரசர் பதிகம் ௨. ஆகப் பதிகம் ரு பெற்றுள்ளது. சுவாமிமலை ரோடு R. இதற்குக் கிழக்கு நான்கு கடிகை தூரம்" என்று குறிக்கப் பெற்றுள்ளது.

உ

சிவக்ஷேத்ர சிவநாமக் கலிவெண்பா.

உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் அருளிச் செய்தது.

காவிரித் தென்கரைத் தல வரிசையில்

....பூத்தவனம்

மன்னு வலஞ்சுழியின் வாழ்பெரிய நாயகியாட்

கின்னமுத மானகபர்த் தீச்சுரனே. (கண்ணி ௬௪)

திருச்சிற்றம்பலம்.